# தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் - தோழர் நல்லகண்ணு பிறந்தநாளையொட்டி – முதல்வர் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, டிச. 28 -**

**விடுதலைப் போராட்ட வீரர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவர் தோழர் நல்லகண்ணு அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாளையொட்டி, முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், "தகைசால் தமிழரே! தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வரின் வலைதளப் பதிவு வருமாறு:-


போராட்டம் தொண்டு பொதுநலன், இதுவே தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களின் நூறாண்டுகால வாழ்க்கைப் பக்கங்களில் நிறைந்திருக்கும் சரிதம்!

எளிமையான வாழ்வுக்குச் சொந்தக்காரர் என்று சொல்வதைவிட, பொதுவுடைமைக் கருத்தியலுக்காகக் கடுமையான வாழ்வை எதிர்கொண்ட தீரர் அவர்!

இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நூற்றாண்டு காணும் வேளையில், செங்குருதி சிந்திப் பாடுபட்ட தோழர் நல்லகண்ணு அய்யா அவர்களும் நூற்றாண்டு காண்கிறார்! இயக்கமே உயிர்மூச்சென வாழும் அவரைப் போற்றுவோம்!

தகைசால் தமிழரே, தமிழ்நாடே தங்களை வாழ்த்துகிறது! தங்களது வழிகாட்டுதலில் சமத்துவத்தை நோக்கிய பயணத்தில் முன்செல்கிறோம்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.






**அன்புமணி:** தி.மு.க.வுக்கு நிபந்தனையற்ற ஆதரவு தரத் தயார்!

**யாரு கேட்டா?**



**ஜி.கே.மணி:** பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகத் தயார்!

**விலகிக்கோ!**

# நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களில் ஒருவராக விளங்கியவர்!

## மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் மறைவுக்கு – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச. 28 -**

**ஞானபீடம் உள்ளிட்ட பல்வேறு விருதுகளை பெற்ற மலையாள எழுத்தாளர் எம்.டி.வாசுதேவன் அவர்களின் மறைவையொட்டி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், "நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கியவர், எம்.டி.வாசுதேவன் அவர்கள்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**



முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:-

ஞானபீடம், பத்மபூஷன், சாகித்ய அகாடெமி உள்ளிட்ட உயர் விருதுகளை வென்ற மலையாள எழுத்தாளர் திரு. எம்.டி. வாசுதேவன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து வருந்துகிறேன்.

நாலுகெட்டு, அசுரவித்து, மஞ்சு, காலம் போன்ற நாவல்கள், நிர்ம்மால்யம், பெருந்தச்சன், ஒரு வடக்கன் வீரகாத போன்ற திரைப்படங்கள் வழியே கேரள மாநிலத்தின் சமூக மாற்றங்களை மிக நுணுக்கமாகப் படம்பிடித்துக் காட்டிய படைப்பாளராக அவர் திகழ்ந்தார்.

தமிழ், ஆங்கிலம் முதலிய பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட அவரது நூல்களின் வழியே, மலையாளிகளைக் கடந்த பெரும் வாசகப் பரப்பைச் சொந்தமாக்கிக் கொண்டவர் அவர். மலையாளத்திரையுலகின் கிளாசிக்குகள் எனக் கருதப்படும் பல படங்களுக்கு வாசுதேவன் அவர்கள் திரைக்கதை எழுதியதோடு, தாமே சில படங்களை இயக்கவும் செய்திருக்கிறார், தேசிய விருது முதலிய விருது களையும் பெற்றிருக்கிறார்.

எழுத்தாளர், திரைக்கதையாசிரியர், இயக்குநராக மட்டுமன்றி மாத்ருபூமி இதழின் ஆசிரியராக இருந்து, பல இளம் எழுத்தாளர்களை அடையாளம் கண்டு வளர்த்தெடுத்த வகையில் மலையாள மொழிக்கும் கேரளச் சமூகத்துக்கும் அவர் ஆற்றிய பங்களிப்புகள் பல தலைமுறைகளுக்கு அவரது பெயரைச் சொல்லிக் கொண்டிருக்கும்.

நவீன மலையாள இலக்கியத்தின் முகங்களுள் ஒருவராக விளங்கிய எம்.டி. வாசுதேவன் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், உலகம் முழுவதும் உள்ள அவரது வாசகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அச்செய்தியில் முதல்வர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# கடலூர் மேற்கு மாவட்ட வழக்கறிஞர் அணி ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர்- அமைச்சர் சி.வி. கணேசன் அறிக்கை!

*கடலூர், டிச. 28 -*

*கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சி.வி.கணேசன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:*

*கழக தலைவர் முதலமைச்சர் மு. க.ஸ்டாலின் அவர்களின் வழி காட்டுதல்படியும், துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின் படியும் கழக சட்டத்துறை செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் என். ஆர். இளங்கோ அவர்களின் அறிவிப்பின் படி, வருகின்ற 29.12.2024 ஞாயிற்று கிழமை மாலை 3 .00 மணியளவில், நெய்வேலி தொ. மு.ச. அலுவலகத்தில் கடலூர் மேற்கு மாவட்ட தி.மு.க வழக்கறிஞரணி நிர்வாகிகள் கூட்டம் நடைபெற உள்ளது.*



*இக்கூட்டத்தில் கழக சட்டத்துறை இணைச் செயலாளர் மத்திய மண்டல பொறுப்பாளர் சூர்யா வெற்றிகொண்டான் அவர்களும், தலைமை கழக வழக்கறிஞர் மூ. தினேஷ்குமார் அவர்களும் கலந்து கொண்டு ஆலோசனை வழங்க உள்ளனர்.*

*ஆகவே கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஒன்றிய கழக, நகர கழக, பேரூர் கழக, செயலாளர்கள் மாவட்ட வழக்கறிஞர் அணி நிர்வாகிகள் நீதிமன்ற வழக்கறிஞர்கள் அனைவரும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். பொருள்:*

*1.கழக சட்டத்துறையின் சார்பாக வருகின்ற 18.1.2025 அன்று நடைபெறும் வழக்கறிஞர்கள் அணி 3 வது மாநாடு சம்பந்தமாக,*

*2. கழக ஆக்க பணிகள்*

*இவ்வாறு மாவட்ட செயலாளர் அமைச்சர் சிவி கணேசன் தமது அறிக்கையில் கேட்டுக் கொண்டுள்ளார்.*



பெரம்பலூர் மாவட்டத்தில், மாவட்ட தி.மு.க.சார்பில், பகுத்தறிவு பகலவன் தந்தை பெரியார் அவர்களின் 51 வது நினைவு தினத்தை முன்னிட்டு, மாவட்ட கழக அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு, மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் தலைமையில், சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. அதன் பிறகு பழைய பேருந்து நிலையத்தில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கும் மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது . இதில் மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் குன்னம் சி. ராஜேந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் பா. துரைசாமி, தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், மாவட்ட கழக துணை செயலாளர்கள் டி.சி.பாஸ்கர், நூருல்ஹிதா இஸ்மாயில், ஒன்றிய கழக செயலாளர்கள் ம.ராஜ்குமார் தி.மதியழகன்,எஸ். நல்லதம்பி, ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் டாக்டர் செ.வல்லபன், ந.ஜெகதீஸ்வரன் உள்ளிட்ட கழக மாநில மாவட்ட ஒன்றிய நகர பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் பல்வேறு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




முன்னாள் அகில இந்திய தொமுச பேரவை துணைத் தலைவரும், டாஸ்மாக் தொ.மு.ச. தலைவரும், சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி பிருந்தா தேவி ஐ.ஏ.எஸ். அவர்களின் தகப்பனாருமான, வி.ராஜவேலு அவர்களின், இரண்டாம் ஆண்டு நினைவு நினைவு தினம், 26.12.2024, அவரது சொந்த ஊரான கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி ஒன்றியம் வானதி ராயபுரம் ஊராட்சி, வானதி ராயபுரம் கிராமத்தில், தொ.மு.ச. பேரவை பொதுச் செயலாளர. மு.சண்முகம் தலைமையில் நடைபெற்றது. பேரவை தலைவர் கி.நடராஜன் முன்னிலை வகித்தார். மாண்புமிகு வேளாண்மை மற்றும் உழவுவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரையாற்றினார். சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. மற்றும் கழக நிர்வாகிகள், தொ.மு.ச நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### முதல்வர் காணொலி மூலம் திறப்பு! ஒலக்கூர் ஒன்றியம்

# மோட்டூரில் ரூ.28.08 லட்சத்தில் 2 கூடுதல் வகுப்பறைக் கட்டிடம் திறப்பு!

## எம்.எஸ்.தரணிவேந்தன் எம்.பி. – பெ.சேகர் பள்ளிக் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினர்!

*திண்டிவனம், டிச. 27 -*

*விழுப்புரம் மாவட்டம் ஒலக்கூர் ஒன்றியம் செம்பாக்கம் ஊராட்சி மோட்டூர் கிராமத்தில் குழந்தை நேய பள்ளி உட் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் இரண்டு கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டப்பட்டு அதன் திறப்பு விழா நிகழ்ச்சி நடைபெற்றது.*

*சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் காணொளி காட்சி வாயிலாக புதிதாக கட்டப்பட்ட பள்ளி கட்டிடத்தை திறந்துவைத்தார்.*

*இதையடுத்து புதிதாக கட்டப்பட்ட பள்ளி வகுப்பறையில் ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம் . எஸ். தரணி வேந்தன், விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் ஆகியோர் கலந்து கொண்டு பள்ளி வகுப்பறையை திறந்து வைத்து குத்து விளக்கு ஏற்றி வைத்து பள்ளி குழந்தைகளுக்கும், பொது மக்களுக்கு இனிப்பு வழங்கினார்.*

*முன்னதாக பள்ளி வளாகத்தில் நடைபெற்ற இறைவனக்க நிகழ்ச்சியில் தேசியக் கொடியினை ஆரணி எம்.பி. எம்.எஸ். தரணி வேந்தன் ஏற்றி வைத்து மரியாதை செலுத்தினார்.*

*நிகழ்ச்சியில் ஒலக்கூர் ஒன்றிய பெருந்தலைவர் சொக்கலிங்கம், துணை சேர்மன் ராஜாராமன்,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சரவணகுமார், சிவக்குமார்,தொடக்கக்கல்வி அலுவலர் கிருஷ்ணன், ஊராட்சி மன்ற தலைவர் ஏழுமலை, ஒன்றிய கவுன்சிலர் ஊரல் அண்ணாதுரை, பள்ளி தலைமை ஆசிரியர் சுப்பிரமணியன், உதவி தலைமை ஆசிரியர் ராமமூர்த்தி, ஒன்றிய துணை செயலாளர் காளி, ஒன்றிய பொருளாளர் திரு ஞான சம்பந்தம், மாவட்டப் பிரதிநிதி மணி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அணி துணை அமைப்பாளர் ராஜா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரம், ஊராட்சி மன்ற துணைத் தலைவர் பழனி, கிளைச் செயலாளர் மணவாளன், முன்னாள் கிளை செயலாளர் பலராமன், நிர்வாகிகள் லட்சுமணன், ஸ்ரீதர், சுப்பிரமணி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*



விழுப்புரம் வடக்கு மாவட்டம் மரக்காணத்தில் 20 ஆண்டு சுனாமி நினைவு தினத்தை முன்னிட்டு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர் தலைமையில் தி.மு.க. நிர்வாகிகள் மரக்காணம் கடற்கரையில் பால், மலர் தூவி அஞ்சலிசெலுத்தினர். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்ட துணை செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், பொதுக்குழு உறுப்பினர் பாலகிருஷ்ணன், உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



கழக இளந்தலைவர் தமிழ் நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு குன்றாண்டார் கோவில் மத்திய ஒன்றிய கழகத்தின் சார்பில், மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், ஒன்றிய கழக செயலாளர் சி.சண்முகம் ஏற்பாட்டில் மாபெரும் மாட்டு வண்டி மற்றும் குதிரை வண்டி பந்தயம் நடைபெற்றது. பெரியமாடு, சிறியமாடு என மூன்று பிரிவுகளாக மாட்டு வண்டி பந்தயமும், குதிரை வண்டி பந்தயமும் நடைபெற்ற பந்தயத்தினை மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன கொடியசைத்து தொடங்கி வைத்து, வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்ச்சியில், கே.ஆர்.என். போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, தவ பாஞ்சாலன், வழக்கறிஞர் பி.அண்ணாத்துரை, டாக்டர் செ.குறிஞ்சி வாணன், டி.செல்வம், ஆ.ராஜேந்திர சோழன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின் ராஜா, கே.எம்.கே.ரவிக்குமார், எம்.ஏ.எம். இம்தியாஸ், தாயினிப் பட்டி கண்ணன், தமிழினியன், மாநில, மாவட்ட, ஒன்றிய கழக, பேரூர் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் மற்றும் பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.